**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை – திரு.எஸ்.உத்தமராஜ், பி.ஏ., பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**இராமநாதபுரம்**

**2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 06–ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.03/2024**
**in**
**O.S.No.61/2022**

T. சத்யா – மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

M. பாலு – எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பாக 03.06.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.G.தினேஷ்ராஜ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.J.உதுமான், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு விவாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

O.S.No.61/2022 வழக்கில் கடந்த 08.12.2023 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் Order 9 Rule 7–ன் படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.06 17:22:04 +0530

2. <u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>

அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி வாதி தரப்பு 1–வது சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கடந்த 08.12.2023 அன்று வாய்தா ஏற்பட்டிருந்த போது மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்தித்து வழக்கிற்கான விபரங்களை சொல்ல இயலாததால் கடந்த 08.12.2023 அன்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது ஏற்பட்டது. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் வாதி தரப்பு 1–வது சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு வாதத்தை கேட்டு தீர்ப்பு செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். இல்லாது போனால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும், ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்பட்டுவிடும் என்று கூறி மனுதாரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>:–

எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த அசல் வழக்கில் கடந்த 18.02.2023 அன்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கில் ஏற்கனவே மனுதாரர் தாக்கல் செய்திருந்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யும் மனு இ.ம.எண்.154/2023 கடந்த 04.08.2023 அன்று அனுமதிக்கப்பட்ட பின்னர் எதிர்மனுதாரருக்கு வயதாகிவிட்டது. தன் வழக்கை உடனே நடத்த வேண்டும் என்று எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த பின்பு இவ்வழக்கில் எதிர்மனுதாரர் 1–வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு ஆவணங்களை தாக்கல் செய்த பின்னர் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய இவ்வழக்கில் பலமுறை வாய்தா ஏற்பட்ட போது எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாமல் மனுதாரர் அலைக்கழிவு செய்தார்.

S UTHAMARAJ Digitally signed by S UTHAMARAJ Date: 2024.06.06 17:22:28 +0530

மனுதாரர் திட்டமிட்டு கடந்த 08.12.2023 அன்று எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாமல் போனதால் இந்நீதிமன்றத்தில் மனுதாரரை அழைத்து அவர் ஆஜரில்லை என்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கபட்டதை மறைத்து மனுதாரர் பொய்யான விபரங்களை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 08.12.2023 அன்று மனுதாரர் வேண்டுமென்றே எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எதிர்மனுதாரர் தனது வயோதிக நிலையில்தான் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்தில் ஆஜரானார். அசல் வழக்கில் கண்ட கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எதிர்மனுதாரருக்கு மட்டுமே தெரியும். எதிர்மனுதாரர் இருதய நோயாளி. தற்போது எதிர்மனுதாரருக்கு மீண்டும் இருதய வலி ஏற்பட்டு மருத்துவம் பார்த்தபோது இனிமேல் எதிர்மனுதாரர் இதயம் சம்பந்தமான நோய்க்கு மருத்துவம் பார்க்கமுடியாது என்று மருத்துவர் தெரிவித்ததை தெரிந்து கொண்ட மனுதாரர் வேண்டுமென்றே இவ்வழக்கை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக அடிக்கடி ஒருதலைபட்ச உத்தரவிற்கு விட்டுவிட்டு மனுத்தாக்கல் செய்வதையே வழக்கமாக கொண்டுள்ளார். எனவே மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. எனவே மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதே ஆகும்.

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.06 17:22:41 +0530

5. <u>பிரச்சனை</u> :

இரு தரப்பும் கேட்கப்பட்டது. அசல் வழக்கில் 08.12.2023 ம் தேதி பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. மனுதாரர்/பிரதிவாதி தனது மனுவில் 08.12.2023 ம் தேதி தனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் வழக்கறிஞரை சந்தித்து வழக்கிற்கான விபரங்களை சொல்ல இயலவில்லை என்றும் அன்றைய தினம் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் 08.12.2023 அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் பொய்யானவை என்றும் மனுதாரர் இவ்வழக்கை நடத்தாமல் வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டும் என்பதற்காக அடிக்கடி ஒருதலைபட்ச உத்தரவிற்கு விட்டுவிட்டு மனுத்தாக்கல் செய்வதையே வழக்கமாக கொண்டுள்ளார் என்றும் எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்துள்ளார்.

7. எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை இராமநாதபுரம் மாவட்டம் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 02.08.2022 அன்று பிரதிவாதி அடமான கடன் மூலமாக வாதிக்கு செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்த கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 06.08.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு பிரதிவாதி தரப்பில் 08.09.2022 அன்று வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்பு

S UTHAMARAJ Digitally signed by S UTHAMARAJ Date: 2024.06.06 17:22:54 +0530

இந்நீதிமன்றத்திற்கு 25.01.2023 அன்று மாறுதல் செய்யப்பட்டு 27.01.2023 அன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய அவகாசம் கொடுத்தும் அவர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 08.02.2023 அன்று பிரதிவாதி ஒருலைபட்சமாக்கப்பட்டுள்ளார். பின்னர் 15.02.2023 அன்று வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு 18.02.2023 அன்று பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்பின்னர் மனுதாரர்/பிரதிவாதி 17.03.2023 அன்று Order 9 Rule 13 மனுவுடன் சேர்த்து அசல் வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அம்மனு இ.ம.எண்.154/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 04.08.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் 08.09.2023 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. பின்னர் வாதியை குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் பிரதிவாதி தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் 08.12.2023 அன்று ஒருதலைப்படுத்தப்பட்டுள்ளார். அதன்பின்னர் இம்மனுவை கடந்த 05.01.2024 அன்று தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

**8.** மனு, எதிருரை மற்றும் இருதரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இம்மனுவை ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளே தாக்கல் செய்துள்ளார். எனவே வேண்டுமென்றே காலம் கடத்தும் எண்ணத்துடன் எதிர்மனுதாரர் நடந்து கொண்டதாக கருத இயலாது. இருதய நோய் ஏற்பட்ட எதிர்மனுதாரருக்கு இருதயம் சம்பந்தமாக மருத்துவம் பார்க்கமுடியாது என்று மருத்துவரால் தெரிவிக்கப்பட்டதை தெரிந்து கொண்டு மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை காலம் கடத்தி வருவதாக

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.06 17:23:07 +0530

எதிருரையில் கூறப்பட்டுள்ளது. எதிருரையில் சொல்லியுள்ள இந்த காரணம் ஏற்ககக்கூடியதாக இல்லை. ஏனெனில், அதனை நிரூபிக்கும் விதமாக எந்த ஆதாரமும் முன்னிடப்படவில்லை. எனவே மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கை மேற்கொண்டு நடத்துவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால் இம்மனுவானது செலவின்றி அனுமதிக்க கூடிய ஒன்றே என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. முடிவில், எதிர்மனுதாரான வா.சா.1–ஐ காலம் தாழ்த்தாமல் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று மனுதாரருக்கு நிபந்தனை விதித்து இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ம் ஆண்டு ஜூன் திங்கள் 06–ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.06 17:21:29 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

S UTHAMARAJ
Digitally signed by S UTHAMARAJ
Date: 2024.06.06 17:21:41 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**